# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 13.06.2025

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 21539/B/2022**

திரு.க.தமிழரசன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (13.06.2025) காணொலி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர்/ மனுதாரர் | திரு.க.தமிழரசன் அவர்கள் கடலூர் மாவட்ட ஆட்சியரக தேசிய தகவல் மையத்தின்(NIC) காணொலிகாட்சி அரங்கில் நேரடியாக ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.ஆர்.திருநாவுக்கரசு, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்மு உதவியாளர் (நிலம்) (பொறுப்பு), கடலூர் மாவட்டம் அவர்கள் உரிய அங்கீகார கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்து ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனுநாள் | 22.07.2022 |
| **கோரிய தகவல்**:- மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவு 6(1) - 6(3) - 7(1)-ன் கீழ் தகவல் வழங்க வேண்டி 04.10.2021 அன்று தான் தாக்கல் செய்த மனு எப்போது கிடைக்கப்பெற்றது, அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 7 இனங்களில் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கடலூர் மாவட்டம் மனு அளித்துள்ளார். | |
| சட்டப்பிரிவு 6(3)-இன் படி மனுதாரரின் மனு மாற்றம் செய்யப்பட்ட நாள் | ...................... |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் கடிதம் நாள் | 12.09.2022 |
| சட்டப்பிரிவு 19(1) ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 15.09.2022 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் கடிதம் நாள் | ...................... |
| சட்டப்பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.12.2022 |

| | |
|---|---|
| ஆணையத்தின் அறிவிப்பு நாள் | 12.04.2022 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் கடிதம் நாள் | ......................... |

2. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, மனுதாரருக்கு ஏற்கனவே 02.05.2023 தேதியிட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையில் காணொலிகாட்சி மூலம் ஆஜரான மனுதாரர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது 04.10.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவின் மீது நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை எனவும், தான் கோரிய OSR, SLR ஆவண நகல்கள் இன்னும் தனக்கு வழங்கப்படவில்லை எனவும், தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, மனுதாரர் 04.10.2021 தேதியிட்டு தாக்கல் செய்த மனுவில் இனம் 1-இல் கோரும் கடலூர் மாவட்டம், விருததாசலம் வட்டம் கொல்லிருப்பு கிராமத்தின் வாக்காளர் பட்டியல் 1960ம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு வரை ஆவணங்களின் நகல் கோரியுள்ளார் என்றும், அவை இணையதளத்திலேயே கிடைக்கும் என்பதால் அதற்கு தகவல் வழங்கவில்லை எனவும், மேலும், இனம் 2-க்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தகவல்கள் போக, மீதமுள்ள தகவல்கள் ஆவண காப்பகத்தில் உள்ளதாகவும், அதனால், 07.12.2021 நாளிட்டு சென்னை, தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு மனுதாரருக்கு தகவல் வழங்கும் பொருட்டு சட்டப்பிரிவு 6(3)-இன் கீழ் மனுதாரரின் மனு மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, அதனை ஆவணக்காப்பகத்திலிருந்து மனுதாரருக்கு பெற்றுத்தர கால அவகாசம் வழங்கும்படி பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான பிரதிநிதி கேட்டுக்கொண்டார். இவற்றை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டு, பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் கால அவகாசம் வழங்கி, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியார் (பொது) அவர்கள், மனுதாரர் 04.10.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-இல் கோரியுள்ள கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கொல்லிருப்பு வருவாய் கிரமத்திற்கு உட்பட்ட பழைய புல எண்.181/6 மற்றும் அதன் உட்பிரிவுகளுக்கு இனம் 2-இல் கோரியுள்ள ஆவணங்களில், மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஆவணங்கள் போக, மீதமுள்ள ஆவணங்களை ஆவணக்காப்பகத்திலிருந்து பெற்று அந்த தகவலையும், 22.07.2022 தேதியிட்ட மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கான முழுமையான தகவல்களையும், மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் சான்றொப்பமிட்டு, சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அதன் நகலையும், மனுதாரர் தகவலை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து, ஒரு அறிக்கையாக தயார் செய்து இவ்வாணையத்திற்கு 18.07.2025 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தின் தேசிய தகவல் மையத்தின் காணொலி காட்சி அரங்கில் முற்பகல் 11.00 மணிக்கு பொதுத் தகவல் அலுவலர் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்படி அறிக்கையானது 18.07.2025-க்கு முன்பே இவ்வாணையத்திற்கு வந்தடையும் வகையில் பதிவு தபால் மற்றும் மின்னஞ்சலில் (sicbsec1@gmail.com) அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***
2. ***மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு***

***உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 21539/B/2022**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:**
பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

**மனுதாரர்:**
திரு.க.தமிழரசன்,
91/72, கொல்லிருப்பு,
மேலகுப்பம் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
கடலூர் மாவட்டம் - 607 802.

Copy to: File
AK/PC